பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය උතුරු පළාත් සභාව
**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

**63, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**63, නල්ලූර් හරස් පාර, නල්ලූර්, යාපනය.**
**63, Nallur Cross Street, Nallur, Jaffna.**

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

My No: NP/09/FRM/CIR/2016 15/11/2016

**மாகாண நிதிச் சுற்றுநிருப இல: PF/06/2016**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**மாகாண நிதிவிதிகள்: 68,69,70,75 மற்றும் 429ன் பிரகாரம்,**
**இழப்புக்கள், நட்டங்களைப் பதிவழித்தல்**

மேற்படி விடயம் தொடர்பாக,

1. வட மாகாண சபைக்குரிய சொத்துக்களிற்கு ஏற்படும் நட்டங்கள், இழப்புக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் பெறுமதி, அதற்கான காரணங்களை ஆய்ந்தறிதல், விசாரணை மேற்கொண்டு பொறுப்பை நிர்ணயித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி மாகாண நிதி விதிகள்: 68,69,70 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதனையும்,

2. விபத்துக்கள் இடம்பெறும்போது, PF/08/2014 ம் இலக்கமும் 11.08.2014ம் திகதியும் கொண்ட மாகாண நிதிச் சுற்றுநிருபத்திற்கமைவாக, விபத்து அறிக்கை படிவம் I, II ஐ பூரணப்படுத்திப் பிரதம செயலாளர், வ.மா அவர்களிற்கு சமர்ப்பிப்பதுடன், நட்டங்கள் ஏதேனும் ஏற்பட்டால் அவை தொடர்பாக

   i. மாகாண நிதி விதி: 70.1ன் பிரகாரம், இழப்புக்கள் பற்றிய ஆரம்ப அறிக்கை -NP FR 70.1(இணைப்பு I)

   ii. மாகாணநிதிவிதி: 70.5ன் பிரகாரம், இழப்புக்கள் பற்றிய இறுதி அறிக்கை -NP FR 70.5(இணைப்பு II)

   iii. மாகாண நிதி விதி: 75ன் பிரகாரம், இழப்புக்களைப் பதிவழித்தலுக்கான விண்ணப்பம் -NP FR 75 (இணைப்பு III)

   ஆகிய படிவங்களை உரியமுறையில் பூரணப்படுத்தி உரிய மாகாண நிதி விதிகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதனையும் அமைச்சின் செயலாளர்களும், திணைக்களத் தலைவர்களும் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

3) மேலும், மாகாண நிதி விதிகள்: 69, 429 ஆகியவற்றில் குறிப்பிட்டவாறு, வாகன விபத்துக்கள் இடம்பெறும்போது உடனடியாக அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிப்பதற்கு வாகனங்களைப் பயன்படுத்தும் உத்தியோகத்தரும், சாரதியும் பொறுப்புடையவர்களாவார்.

பிரதிப் பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
DEPUTY CHIEF SECRETARY

நிர்வாகம் / පරිපාලන / ADMINISTRATION — Tel : 021 320 2571 (Dir) : 021 222 0960 (Gen) Fax : 021 222 0950 e-mail : ppas.np@gmail.com

நிதி / මුදල් / FINANCE — Tel : 021 222 0850 (Dir) : 021 222 0854 (Gen) Fax : 021 222 0853 e-mail : nptreasury@gmail.com

திட்டமிடல் / කමසම්පාදන / PLANNING — Tel : 021 223 0355 (Dir) : 021 223 0451 (Gen) Fax : 021 223 0354 e-mail : npplan@sltnet.lk

ஆளணிப்பயிற்சி / පිරිස්පුහුණු / PERSONNEL TRAINING — Tel : 021 739 1250 (Dir) : 021 739 1254 (Gen) Fax : 021 739 1257 e-mail : npmdti@gmail.com

பிரதமஉள்ளககணக்காய்வாளர் / ප්‍රධානඅභ්‍යන්තරවිගණක / CHIEF INTERNAL AUDITOR — Tel : 021 222 0796 (Dir) : 021 222 9528 (Gen) Fax : 021 222 0796 e-mail : npcaudit@yahoo.com

4) மாகாண நிதிவிதி: 76ன் பிரகாரம், மாகாணசபைக்குரிய சொத்துக்களிற்கு நட்டங்கள் ஏற்படும் போது அவை தொடர்பான விபரங்கள் நட்டங்கள் பதிவேட்டில் பதியப்படுவதனை அமைச்சுக்கள், திணைக்களங்களின் பிரதம கணக்காளர்கள், கணக்காளர்கள், மற்றும் நிதி உதவியாளர்கள் உறுதிப்படுத்திக்கொள்வதுடன், அதனை உரியமுறையில் பேணுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். நட்டங்கள் பதிவேட்டின் மாதிரி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய நடைமுறைகளை அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்களிலும் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அ.பத்திநாதன்,
பிரதம செயலாளர்

பிரதிகள்:-

1) கௌரவ ஆளுநரின் செயலாளர், வ.மா - கௌரவ ஆளுநர் அவர்களிற்கு அறியத்தருவதற்காக
2) உதவிக்கணக்காய்வாளர் நாயகம், வ.மா
3) பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், வ.மா
} தகவலிற்காக